அலைதாவி கடல் ஏறி தினம் தினம் நடந்தார்
பகைதேடி கடல்லேறி வெடிதனை சுமந்தார் 2
அழியாத வரலாற்றில் நிலை எடுத்தார் 2
என்றும் அணையாத தீபங்கள் என எரிந்தார் 2

அலைதாவி கடல் ஏறி தினம் தினம் நடந்தார்
பகைதேடி கடல்லேறி வெடிதனை சுமந்தார்

கரைவெளி என்றியே கடல் அணியே நகர்ந்தது
வடக்கே இருந்த படை அணி மகிழ்ந்தது 2
பொங்கிடும் அலையில் பகைவனின் கலங்கள்
வென்றிடும் புலிகள் வலையினில் இவர்கள்
வீரத்தின் வீரர்கள் விளையாடினர் 2
பகை கலங்கள் அழித்து வெடியாகினர்

கடலினில் புலிகள் எழுந்து விரைந்தனர்
அலையின் மடியில் கரைந்து போயினர் 2
கடனில் விழிகள் கடலினில் பாத்தது
வெடிகேட்டதும் விழிகள் ஓரங்கள் நனைந்தது
ஈழத்தின் வேர்கள் இவர் ஆயின 2
கரும்புலிகள் என்றே படம் ஆயின

அலைதாவி கடல் ஏறி தினம் தினம் நடந்தார்
பகைதேடி கடல்லேறி வெடிதனை சுமந்தார் 2
அழியாத வரலாற்றில் நிலை எடுத்தார் 2
என்றும் அணையாத தீபங்கள் என எரிந்தார் 2